பக்கங்கள் 20+ 02

# மாலை முரசு

## பாதுகாப்பு வாகனத்தை ஒப்படைத்தார் மஹிந்த



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பாதுகாப்பு வாகனத்தை மீண்டும் அரசிடம் ஒப்படைத்துள்ளார் என்று மஹிந்த 03▶

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 18 சனிக்கிழமை 04.10.2025 | அதிர்வு 65

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்



### சட்டத்தின் பிடியில் இருந்து

# ராஜபக்ஷக்கள் தப்ப முடியாது!

## தண்டனை கிடைத்தே தீரும் என்கின்றது அநுர அரசு



"ராஜபக்ஷக்கள் பாரிய குற்றங்களை இழைத்தவர்கள். அவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் படும். சட்டத்தின் பிடியில் இருந்து அவர்கள் தப்ப முடியாது."

- இவ்வாறு அமைச்சர் நளிந்த 02▶

## மாகாண சபைத் தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்துக!

### கரு ஜயசூரிய வலியுறுத்து



மாகாண சபைகளுக்குரிய தேர்தலை இந்த வருடத்துக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளார் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன் னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் கடந்த 11 வருடங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது. எனினும், உள்ளூராட்சி 04▶

## லொறி மோதி மாணவன் பலி!



லொறி மோதி பாடசாலை மாணவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று சனிக்கிழமை காலை, கம்பஹா – மினுவாங்கொடை வீதியில் வீதியவத்த சந்தியில் 05▶





# வவுனியா - பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையம் திறப்பு!

**(கி.வசந்தன்)**

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையக் கட்டடம் இன்று திறந்து வைக்கப்பட்டது. வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜயசேகரவால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் பெயர் ப் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டு நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்ன விஜயமுனி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பண்டாரிக்குளம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், பொலிஸார், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“கொழும்பில் இருந்து தங்காலைக்குக் குடியமரச் சென்றுள்ள மஹிந்த ராஜபக்ஷவும், அவரின் குடும்பத்தினரும் அங்கிருந்து கொண்டு அரசியல் இலாபம் தேடும் வகையில் ஒப்பாரி வைக்கின்றனர். அவர்களின் ஒப்பாரியால் நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்த முடியாது.

ஒப்பாரி வைத்து தப்பிப்பிழைக்கலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழல், மோசடிகள் என ராஜபக்ஷக்கள் இழைத்த குற்றங்களுக்குத் தண்டனை கிடைத்தே தீரும்.

மீண்டும் மொட்டுக் கட்சியின் ஆட்சி மலரும் என்று ‘குட்டி ராஜபக்ஷ’ நாமல் கனவு காண்கின்றார். அவர் இழைத்த குற்றங்களை அவர் மறந்தாலும் மக்கள் மறக்கவில்லை.” – என்றார்.

## பாதுகாப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வாகனத்தை ஒப்படைக்கும் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்றும் மனோஜ் கமகே கூறியுள்ளார்.

இந்தப் பாதுகாப்பு வாகனம், துப்பாக்கிச்சூடு மற்றும் ஏனைய ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது.

பாதுகாப்பு வாகனத்தை அரசிடம் ஒப்படைத்ததால் மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் மனோஜ் கமகே குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்காக அரசால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் கடந்த செப்டெம்பர் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் தங்கியிருந்த கொழும்பு – விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச வாசஸ்தலத்தில் இருந்து கடந்த செப்டெம்பர் 12ஆம் திகதி வெளியேறி, அம்பாந்தோட்டை – தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்தில் குடி பெயர்ந்தார்.

இந்நிலையில், தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்தில் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்காகப் பல அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கால்டன் இல்லத்துக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# வடமராட்சியில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகம் இன்று திறந்து வைக்கப்பட்டது!

(பூ.லின்ரன்)

தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி அலுவலகம் பிமல் ரத்நாயக்கா வால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சிக்கான அலுவலகம் தேசிய மக்கள் சக்தி அரசின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், பொது விவரம் சேவைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் பிமல் ரத்தநாயக்காவால் சற்றுமுன்னர் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு மங்கள சுடர்கள் ஏற்றப்பட்டன.

சுடர்களை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், பொது விவரம் சேவைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் பிமல் ரத்தநாயக்கா, கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், ரஜீவன், மருத்துவர் பவந்தராசா உட்பட பலர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## மாகாண..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தல் முடிந்த பின்னர், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன.ஆளுநர்களின் கீழ்தான் மாகாண சபை செயற்படுகின்றது. ஆனால், அந்த அதிகாரம் மக்கள் பிரதிநிதிகள் வசம் இருக்க வேண்டும். குறிப்பாக நிர்வாகம் ஆளுநர் வசம் இருப்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

மாகாண சபைத் தேர்தல் பற்றி தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, சிறியதொரு அரசமைப்பு மறுசீரமைப்பு ஊடாக அந்தத் தேர்தலை நடத்த முடியும். இந்த வருடத்துக்குள் அதனை நடத்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.” – என்றார்.

# ஊரியான் வீதி புனரமைப்புக்கு தற்காலிகமாக மூடப்படுகிறது!

(த.சுபேசன்)

கைதடி ஊரியான் வீதியானது வீதி புனரமைப்பு பணிகளுக்காக எதிர்வரும் (06) ஆம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல்வரை தற்காலிகமாக மூடப்படவிருப்பதாக சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் பொ.குகதாசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாண சபைக்கு அருகாமையில் செல்லும் ஊரியான் வீதி ஏ-9 வீதிப் பக்கமாக தற்காலிகமாக மூடப்படவிருப்பதால் அவ் வீதியின் பயன்பாட்டாளர்கள் கோப்பாய் - கைதடி வீதியின் ஊடாக ஊரியான் வீதியை பயன்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## லொறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

அதிக வேகத்தில் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பாடசாலை மாணவன் மீது மோதி பின்னர் கார் மற்றும் ஓட்டோ மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த 15 வயது பாடசாலை மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தையடுத்து லொறியின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்று கம்பஹா பொலிஸ் நிலையத்தில் சரணைந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சுற்றுலாப் பயணிகள் வருகை

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்காக அந்நிய செலாவணி ஈட்டலுக்கு ஆலாய்ப் பறக்கும் இலங்கை, அதற்கு இப்போதைய நிலையில் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பெரிதும் தங்கி இருக் கின்றது.

அதற்காக அந்தத் துறையை இலங்கை அரசு விழுந்தடித்து பல வகைகளிலும் ஊக்குவிக்க முயன்றாலும், 2018 ஆம் ஆண்டில் - கொவிட் பிரச்சினைகள் உருவாக முன்னர் - இருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை இலக்கை இன்னும் நாடு மீளவும் எட்டவில்லை என்று கூறப்படு கின்றது.

2018 ஆம் ஆண்டில் நாட்டுக்குள் மொத்தம் 23 லட்சத்து 33 ஆயிரத்து 796 சுற்றுலாப் பயணிகள் வந்தனர். கடந்த ஆண்டில் - அதாவது 2024 இல் - மொத்தம் 20 லட்சத்து 53 ஆயிரத்து 465 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வந்துள்ளனர்.

இந்த ஆண்டில் கடந்த 30 ஆம் திகதி வரையில் முதல் ஒன்பது மாதங்களில் 17 லட்சத்து 25 ஆயி ரத்து 494 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள். அடுத்த மூன்று மாதங்களில் இத் தொகை மேலும் அதிகரித்தாலும் அது கடந்த ஆண்டில் நாட்டுக்குள் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை தாண்டினாலும், முன்னர் நாடு சுமுகமாக இருந்த காலத்தில் - 2018 ஆம் ஆண்டில் - நாட்டுக்குள் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இவ்வாண்டும் தாண்ட முடியாது என்று புள்ளி விவரங்கள் உறுதிப் படுத்துகின்றன.

தினசரி, வாராந்தம், மாதம் தோறும் நாட்டுக்குள் வரும் சுற்று லாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்பான புள்ளி விவரங்களை ஆரவாரமாக அரசுத் தரப்பு அவ் வப்போது வெளியிட்டாலும் கூட, முன்னைய நிலைமையை இன்னும் நாடு எட்டவில்லை என்பதுதான் யதார்த்த கள நிலை மையாகும்.

சுற்றுலாப் பயணிகளின் வரு கையை அதிகரிக்கச் செய்யும் திட்டமாக ஒருபால் இன உறவு களில் ஈடுபாடு கொண்டவர்கள், இரு பாலினத்தவர்கள் போன்ற தரப்பினர்களையும் கவரும் சுற்றுலாப் பயணத் திட்டங்களை அரசு முன்னெடுக்க முயன்ற போதிலும், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், சமூக பிரதி நிதிகள் போன்ற பல தரப்பினரிடம் இருந்து கிடைத்த கடுமையான எதிர்ப்புக் காரணமாக அத்தகைய திட்டம் மேற்கொள்ளப்பட மாட் டாது என்று ஜனாதிபதி தெற்கில் மத நிகழ்வு ஒன்றில் வைத்து பகிரங்கமாக உறுதியளிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

சுற்றுலாப் பயணிகளை கவர வு ம், அவர்கள் நாட்டுக்குள் நுழை யவும் வசதியான துறைமுகம், விமான நிலையம் போன்றவை வடக்கில் இருக்கின்ற போதும், பேரினவாத மேலாண்மைத் திமிர்க் காரணங்களினால் அதற்கு தடை போட்டு, அதைப் புற மொதுக்கி, ஆட்சித் தலைமை நடந்து கொள்வதால் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து, அதன் மூலம் நாட்டுக்கு அந்நிய செலா வணி தேடும் அரசின் முயற்சி முழு அளவில் பயன் தரவில்லை என்பதுதான் உண்மை.



# சாவகச்சேரி சக்தியம்மனின் சாதனையாளர் கௌரவிப்பு

(த.சுபேசன்)

சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ்க் கலவன் பாடசாலையின் 2025 ஆம் ஆண்டுக்கான வாணி விழா, சாதனை யாளர் கௌரவிப்பு மற்றும் சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை பாட சாலை அதிபர் க.ரமணன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற் றிருந்தன. நிகழ்வில் இனிய விருந்தினர் களாக ஆசிரிய ஆலோசகர் திருமதி மயில் வாகனசிங்கம், பழைய மாணவரும் தொழிலதிபருமான இ.ஶ்ரீமணிமாறன், சமூக சேவகர் க.தர்ஷன், கிராம அபிவிருத் திச் சங்கத் தலைவர் த.சுபேசன் மற்றும் வர்த்தகர் க.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன், பெற்றோர் மற்றும் கற்பித்த ஆசிரியருக் கான கௌரவம், புலமைப்பரிசில் பரீட் சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கௌரவம் ஆகிய நிகழ்வுகளுடன் மாண வர்களுடைய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.





# வைக்கோலுக்குத் தீ வைக்கச் சென்ற குடும்பஸ்தர் தீயில் கருகி உயிரிழப்பு!

குடும்பஸ்தர் ஒருவர் தனது வயலில் வைக்கோலுக்குத் தீ வைக்கச் சென்ற போது தீயில் கருகி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை – ஹிங்குரக்கொட, வராஹேன பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஹிங்குரக்கொட, போகஸ் சந்தியில் வசித்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவர் வைக்கோலுக்குத் தீ வைப்பதற் காக தனது வயலுக்கு நேற்று சென்றுள் ளார். பின்னர் இவர் வைக்கோலுக்குத் தீ வைத்த போது அந்தப் பகுதியில் தீ பரவல் ஏற்பட்டு அந்த இடத்திலேயே தீயில் கருகி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது.



உயிரிழந்தவரின் சடலம் பொலன றுவை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை ஹிங்குரக்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியா மாவட்டத்தில் 25,425 ஹெக்டெயர் நிலப்பரப்பில் பெரும் போக நெற் செய்கை

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் பெரும் போக நெற் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார்.

இம்முறை மாவட்டத்தில் 25 ஆயிரத்து 425 ஹெக்டெயர் நெற்செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு வவுனியா மாவட்டத்தில் உள்ள 12 கமநல சேவை மையங்களும் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் நெல் விதைப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.











# பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக பாலமுனையில் மக்கள் பேரணி

(எஸ்.எம்.அறூஸ்)

இஸ்ரேல் தாக்குதலில் பாதிக்கப்பட்டு வரும் பலஸ்தீன் – காஸா மக்களுக்கு ஆதரவாகப் பாலமுனை பிரதேச மக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த உணர்வுப் பேரணி நேற்று வெள்ளிக்கிழமை ஜூம்ஆத் தொழுகையைத் தொடர்ந்து இடம்பெற்றது.

பாலமுனை ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசல் முன்றலில் ஆரம்பமான இந்தப் பேரணி பிரதான வீதியை வந்தடைந்தது. இதன்போது, பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கூடுதலான மக்கள் கலந்துகொண்டதுடன் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் காட்டுமிராண்டித்தனத்தையும் எச்சரித்தனர்.

இதன்போது, அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் உப தலைவரும் அம்பாறை மாவட்டத் தலைவருமான ஐ.எல்.எம்.காஸீம் சூரி மற்றும் தென் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.எச்.றிபாஸ் ஆகியோர

தொடர்ச்சி▼


















# பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக பாலமுனையில் மக்கள் பேரணி

**தொடர்ச்சி▲**

தொடர்பில் விசேட உரையை நிகழ்த்தியதுடன் இஸ்ரேல் நாட்டின் கொலைகார வெறித்தனத்தையும் கண்டித்துப் பேசினர். அத்தோடு விசேட துஆப் பிரார்த்தனையை மௌலவி ஹுஸைன் அவர்கள் நிகழ்த்தினார்.

பெருந்திரளான பாலமுனை மக்கள் பங்கேற்ற இந்தப் பேரணியில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை, உதவித் தவிசாளர் எப்.எம்.நாஜீத், பிரதேச சபை உறுப்பினர் ஐ.ஏ.சிராஜ் உட்பட உலமாக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பாலமுனைப் பிரதேசத்தின் சகல நிறுவனங்கள், அமைப்புக்களை ஒன்றிணைத்ததாக பாலமுனை இளைஞர்கள் அமைப்பு இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர்.















# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் தேர்த் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை (05) காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

சப்பறத் திருவிழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெறவுள்ளது கடந்த மாதம் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவம் நடைபெற்று வருகிறது.

15 ஆம் நாள் உற்சவமாகிய தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை (05) காலை 9 மணியளவில் இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை (06) மாலை 5 மணியளவில் கற்கோவளம் வங்க சமுத்திரத்தில் தீர்த்தத் திருவிழாவும், தொடர்ந்து அதற்கு அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை (07) காலை 9 மணிக்கு கேணித் தீர்த்தமும் மாலை 6 மணியளவில் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. அத்துடன் மஹோற்சவம் நிறைவு பெறும்.





# இ.சு.முரளிதரனின் ‘வியாக்ரன்’ நூல் அறிமுக விழா கொழும்புத்துறையில்

இ.சு.முரளிதரனின் ‘வியாக்ரன்’ நூல் அறிமுக விழா கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நேற்று (03) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் கே.கே.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர் த.லிங்கேஸ்வரன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசிந்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி த.செல்வமனோகரன் அறிமுகவுரை நிகழ்த்தினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் கருத்துரையாற்றினார்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஷாயினி வித்தியானந்தன் செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் குறித்த நூலுக்கான ஓவியங்களை உருவாக்கியதுடன் இந்த நூல் “ஜீவநதி கொமிக்ஸ்” இன் வெளியீடாக வெளிவந்தது.

இந்த நூல் வெளிவருவதற்கு பங்காற்றியர்களுக்கு நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் கௌரவிப்பு வழங்கப்பட்டது.







# பெரியதம்பனை வட்டாரத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு!

செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியதம்பனை வட்டாரத்திலுள்ள கிராமம் ஒன்றில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்று (03) மக்கள் குறைகேள் சந்திப்பில் ஈடுபட்டார்.

பல்வேறு பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இதன்போது மக்களால் தெரியப்படுத்தப்பட்டது. தொடர்ந்து வனவள திணைக்களத்தால் ஏற்படுத தப்படும் பிரச்சினைகள் தொடர்பில் களத்தரிசிப்பிலும் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது பெரியதம்பனை வட்டார பிரதேசசபை உறுப்பினர் யோகேஸ்வரன் சனோஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் ஆகியோரும் இணைந்திருந்தனர்.







# சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு 32 வருட கடூழிய சிறை!

## திருகோணமலை மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(அபு அலா)

திருகோணமலை – சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு 32 ஆண்டு கடூழிய சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லாஹ் நேற்று முன்தினம் (02) வழங்கினார்.

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியிலும் 2022 பெப்ரவரி மாதத்திலும் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த குறிப்பிட்ட நபர் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கு தொடர்பில் சட்டமா அதிபரால் ஐந்து குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பகிர்வுப்



பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தண்டனைச் சட்டக் கோவை 364 (02) உப பிரிவு மற்றும் 436 பிரிவுகளின் அடிப்படையில் குறித்த நபருக்கெதிராக வழக்கு தொடரப்பட்டு வந்தது.

இதனடிப்படையில் குறித்த வழக்கின் சந்தேக நபரான சேருநுவர – தெஹிவத்தை பகுதியில் வசித்து வரும் ரன்கொத் பேடிகே உதார பெதும் (26 வயது) என்ற சந்தேக நபர் தொடர்பில் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்த நிலையில் ஐந்து குற்றச்சாட்டுகளும் வழக்கு விசாரணையின்போது உறுதி செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் திருகோணமலை மேல் நீதிமன்ற அரச சட்டவாதி தர்ஷிகா திருக்குமாரநாதன் ஆஜராகி இருந்தார்.

இதேவேளை குறித்த வழக்கின் தீர்ப்பைத் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டினார்.

மொத்தமாக 8 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் 60 ஆயிரம் செலுத்தவேண்டும். இல்லையேல் மேலும் இரு வருட சாதாரண சிறை தண்டனை வழங்கப்படும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தண்டனை ஏக காலத்தில் நிறைவேற்றப்படும் என்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் உத்தரவிட்டார்.




# முத்துநகர் விவசாயிகளின் போராட்டம் 18 ஆவது நாளாகவும் தொடர்கிறது

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக கொட்டும் மழையிலும் இன்று (04) சனிக்கிழமை 18 ஆவது நாளாகத் தொடர் சத்யாக் கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்கள் 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்த விவசாய நிலத்தைத் தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக இலங்கை துறைமுக அதிகார சபையின் காணி என்று அப்பட்டமாக வழங்கி வைக்கப்பட்டதை அடுத்து இதனை மீளப் பெறக் கோரி இதனை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த முத்து நகர் விவசாய காணியில் சுமார் 800 ஏக்கர் அளவில் நில அபகரிப்பு செய்யப்பட்டு இரு நூறு ஏக்கருக்கும் மேல் தற்போது சுத்தமாக் கப்பட்டு விவசாய குளங்களை மூடிய நிலையில் சூரிய மின் சக்திக்காக கையகப்படுத்தியுள்ளனர்.

இதனால் விவசாயத்தை நம்பிய நிலையில் தாங்கள் மேற்கொண்ட ஜீவனோபாயமான விவசாய செய்கை முழுதும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

இன்றைய தினம் சுதந்திரத்துக்கான பெண்கள் இயக்கம் இந்தச் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் இணைந்து “முத்து நகர் விவசாயிகளின் போராட்டத்தில் நாமும் ஒன்றினைவோம்” போன்ற பதாகையையும் காட்சிப்படுத்தியிருந்தனர்.



# கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2025 ஆண்டுக்கான மாதாந்த அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனையும் பொலிஸ் நிலைய வளாகத்தில் இன்று (04) நடைபெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி தலைமையில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையில் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் கலந்து கொண்டு அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள், சுற்று சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறை உடைகள், விடுதிகள், அலுவலகங்கள் என்பவற்றை பார்வையிட்டதுடன் பொலி ஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்களின் சுகாதார



முறைகள் உடைகள் வாகனங்கள் என்பவற்றை பார்வையிட்ட துடன் பொலிஸ் நிலையத்திலுள்ள பௌதீக வள பற்றாக்குறை தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இறுதியாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வழிப் படுத்தல் வகுப்பு உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொள் ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வள்ளலாரின் 202 ஆவது வருட அவதார தினம் நாளை






அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் இப் பூவுலகில் அவதரித்து 202 வருடங்கள் ஆகின்றன. அவரருளிய திருவருட்பா இன்றுவரையிலும் பேசப்படுகிறது. அவரின் அணையா விளக்கு அணையா அடுப்பு இன்றளவும் கடைப்பிடிக்கப்படுகிறது.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளல் பெருமான், நாம் உண்மையையும் புனிதமும் பெறும் பொருட்டு அருளியதே திருவருட்பா வாகும். அருட்பிரகாச வள்ளலார் பூமிக்கு வருவிக்கப்பட்ட நாள். ஒக்ரோபர் 05 ஆகும்.

இந்தியாவின் கடலூர் மாடட்டம் மருதூரில் 1823 ஒக்ரோபர் 05 ஞாயிற்றுக்கிழமை நாள் அன்று இராமையா சின்னம்மை ஆகியோருக்கு இறைவனால் பூவுலகுக்கு வருவிக்கப்பட்டவரே அருட்பிரகாச வள்ளலார் எனப் போற்றப்படும் இராமலிங்க அடிகளார்.

ஒரு சைவ சமய ஆன்மீகவாதி ஆவார். "எல்லா மதங்களிலும் உள்ள உண்மை ஒன்றே" என்பதைக் குறிக்கும் வண்ணம், இவர் தோற்றுவித்த மார்க்கத்துக்கு "சர்வ சமய சமரச சுத்த சன்மார்க்க சங்கம்" என்று பெயரிட்டார். சைவ சமயத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்த வள்ளலாரைப் பழமைவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். இவர் சாதிய பாகுபாடுகளைக் கடுமையாகச் சாடினார்.

எதிலும் பொது நோக்கம் வேண்டும், பசித்தவர்களுக்கு சாதி, மதம், இனம், மொழி வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும், மத வெறி கூடாது ஆகியவை இவரின் முக்கிய கொள்கைகள் ஆகும். இவ்வாறு பல கொள்கைகளைக் கொண்டிருந்த வள்ளலார். முதன்மைக் கொள்கையாகக் 'கொல்லாமை' கொள்கை ஆன உயிர்களிடத்தில் அருள் செய்யும் கொள்கையைப் பரப்பியவர். "எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க" என்று கூறியவர். இவர் பாடிய ஆறாயிரம் பாடல்களின் தொகுப்பே 'திருவருட்பா' என்று அழைக்கப்படுகிறது. இவரது சேவையைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசு 2007 ஆம் வருடம் இவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டு கௌரவித்தது.

வடலூர் இராமலிங்கம் என அறியப்படுபவர். ஓதாதுணர்ந்த அறிஞர். சமூக சீர்திருத்தவாதி, ஆன்மிகச் சொற்பொழிவாளர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், மொழி ஆய்வாளர், சித்த மருத்துவர், பொதுத் தொண்டாற்றியப் புனிதர் என பன்முகங்களைக் கொண்டவர். திருவருட் பிரகாச வள்ளலார் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படுபவர்.

"தமிழ்க் கவிதைக்குத் தெளிவும் எளிமையும் உருக்கமும் தந்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய பெருமை இராமலிங்கரையே சாரும்" என்கிறார் மு.வரதராசனார்.

### தமிழ் மற்றும் சமுதாயப் பணி

முருகன், இராமன், சிவன் என்று அனைத்துத் தெய்வங்கள் மீதும் பாக்கள் எழுதிய போதிலும் கடவுள் ஒருவரே எவ்வுயிரும் தம்முயிர் போல எண்ணுதல் வேண்டும் கோவில்களில் உயிர்ப் பலி கூடாது என்ற சமய சீர்திருத்தக் கொள்கையுடையவர்.

சாதி, சமய வேற்றுமைகளையும் வழிபாட்டுச் சடங்குகளையும் மறுத்து, இறையை ஒளிவடிவாக வணங்கும் அருட்பெருஞ்சோதி வழிபாட்டை முன்வைத்தவர்.

தனது சமரச சுத்த சன்மார்க்க கொள்கைக்காக,தனிக் கொடி, தனிச் சபை , கண்ட இவர் 'அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை' என தனி முழக்கம் கொண்டவர்.

வடலூரில் சத்தியஞான சபையையும் சத்திய தருமசாலையையும் நிறுவி 'ஜீவகாருண்ய'த்தை வலியுறுத்தியவர்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று இவர் ஏற்றிய 'அணையா அடுப்பு' இன்றளவும் வடலூர் தருமசாலையில் மக்களின் பசியாற்றிக் கொண்டிருக்கிறது.

இராமலிங்க அடிகள் மேற்கொண்ட சமயச் சீர்திருத் தங்கள் அன்றைய மரபார்ந்த சமயவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்படாததால், அவர் எழுதிய திருவருட்பாவுக்கு எதிராக யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், அவரின் பாடல்களை மருட்பா என்று சொல்லி மறுக்க, இருவருக்குமிடையே, அருட்பா மருட்பா விவாதமும் நடந்தது.

### படைப்புகள்

தனது ஒன்பதாவது அகவையில் கந்தகோட்டம் முருகன் மேல் 'தெய்வமணி மாலை' இயற்றியவர்.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற 2 உரைநடை நூல்களையும் ஏறத்தாழ 6000 பாக்கள், ஆறு திருமுறைகள் கொண்ட திருவருட்பாவை இயற்றியுள்ளார். ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர்.

### விருதுகள்

இந்திய ஒன்றிய அரசு 2007 இல் இவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டு கௌரவித்தது.

'ஜோதி வழிபாட்டை முன்னிறுத்தியதால் 'திருவருட் பிரகாச வள்ளலார்' என மக்களால் அழைக்கப்படுகிறார்.

நம்மிடையே வாழ்ந்து மனிதனும் தெய்வமாகலாம் என்ற கோட்பாட்டுக்கு அமைவாக சாதி, சமய, சடங்குகள், மூடநம்பிக்கைகளுக்கு எதிராக சமூக சீர்திருத்த கோட் பாடுகளை மக்கள் மத்தியிலே முன்வைத்து, தனக்கென சங்கம் அமைத்து தனிக்கொடி கண்ட சன்மார்க்கி, அனைத்து உயிர்களும் இன்புற்று வாழ ஜீவகாருண்யம் போதித்த வள்ளலார் என்று அழைக்கப்பட்ட அருட்பிரகாச வள்ளலார் ராமலிங்கம் அடிகளாரின் பிறந்த தின நிகழ்வுகள். சன்மார்க்க கோட்பாடுகளை ஏற்ற உலகெ லாம் வாழும் மக்களால் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்படவுள்ளது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டம் கல்முனை பாண்டிருப்பில் அமையப்பெற்றுள்ள வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்ப மையத்திலும் விசேட ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற ஒழுங்கு செய்யப்பட் டுள்ளன.

வள்ளலாரின் 202 ஆவது அவதார தின விழா சிறப்பாக அமைய வாழ்த்துகள்.

**வித்தகர் விபுலமாமணி**
வி.ரி. சகாதேவராஜா,
காரைதீவு.




# விலங்குகளும் பூமியின் பங்குதாரர்களே!

**(வாயில்லா ஜீவராசிகளின் உரிமைகளை பேசும் உலக விலங்குகள் தினம் இன்று)**

உலக விலங்குகள் தினம் ஆண்டுதோறும் ஒக்ரோபர் 4 அன்று கொண்டாடப்பட்டு வருகிறது. உலக விலங்கு தினத்தின் நோக்கம் உலகெங்கிலும் உள்ள விலங்குகளின் நிலையை மேம்படுத்துவதற்காக அவற்றுக்காக உலகெங்கிலும் இருக்கின்ற விலங்கு நலன்புரி அமைப்பின் தரங்களை உயர்த்துவதாகும்.

உலக விலங்கு தின கொண்டாட்டத்தை உருவாக்குவதன் மூலமாக விலங்கு நல இயக்கத்தை ஒன்றிணைத்து உலகளாவிய சக்தியாக அணி திரட்டி உலகத்தை அனைத்து விலங்குகளுக்கும் ஏற்ற சிறந்த இடமாக மாற்றுவதே ஆகும். இது தேசியம், மதம், நம்பிக்கை அல்லது அரசியல் சித்தாந்தத்தை பொருட்படுத்தாமல் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வழிகளில் கொண்டாடப்படுகிறது.

இந்த நாளில் விலங்குகளின் அனைத்து வாழ்க்கை முறைகள் கொண்டாடப்பட்டு, உலக அனைத்திலும் முக்கிய நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இயற்கை ஆர்வலரும் விலங்குகளின் தெய்வமாக மதிக்கப்படுபவருமான பிரான்சிஸ் அசிசி என்பவரின் வணக்க நிகழ்வு ஒக்ரோபர் 4 இல் வருவதால் இந்நாள் வனவிலங்கு நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. 1931 ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் கடைபிடிக்கப்பட்ட இத்தினம் நாளடைவில் பிற நாடுகளிலும் கடைபிடிக்கப்பட்டது. அனேகமான கிறிஸ்தவ தேவாலயங்கள் ஒக்ரோபர் 4 இற்கு அண்மையில் வரும் ஞாயிற்றுக்கிழமையில் விலங்குகளுக்கு ஆசீர்வாதம் வழங்கும் சிறப்பு நிகழ்வுகளை நடத்தி வருகின்றன. ஆனாலும் இன்று கிறிஸ்தவர்களால் மட்டுமல்லாமல் உலகின் விலங்கு ஆர்வலர்கள் அனைவரினாலும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. விலங்குகள் சரணாலயங்கள் இந்த நாளில் பல நிதிசேகரிப்பு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.

உலகம் இயல்பான நிலையில் இருப்பதற்கு பல்லுயிர் பெருக்கம் மிகவும் அவசியம். காடுகளை அழித்து மனிதர்கள் மட்டும் வாழ்ந்தால் போதாது பறவைகளும் விலங்குகளும் அவசியம் என்பதை அனைவருமே உணர வேண்டும். என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 4 ஆம் திகதியை உலக விலங்குகள் தினமாக கொண்டாடப்படுகிறது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த பிரபல வன ஆர்வலர் பிரான்சிஸ் அசிசி உயிரிழந்த நாளையே உலக விலங்குகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

44 வருடங்களில் விலங்குகளின் எண்ணிக்கை 58 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இதற்கு பிரதான காரணமாக மனித செயற்பாடுகள் சூழல் மாசு, காலநிலை மாற்றம் மற்றும் விலங்கு வியாபாரம் என உலக வனவிலங்கு நிதியம் கூறுகிறது. எதிர்காலத்தில் தற்போது நிலவும் விலங்குகளின் எண்ணிக்கையில் சுமார் மூன்று இரண்டு பங்கு அடிப்படைய கூடும் என உலக வனவிலங்கு நிதியம் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு உலக விலங்குகள் தினத்துக்கான கருப்பொருளாக "Save Animals, Save the Planet!" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது 'விலங்குகளின் நலனும் பூமியின் ஆரோக்கியமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்' என்பது கருப்பொருளாக அமைகிறது.

விலங்குகளின் பாதுகாப்பும் பூமியின் ஆரோக்கியமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதை உலக மக்களிடம் உணர்த்துவதாகும். விலங்குகளை காப்பது என்பது சுற்றுச்சூழல் சமநிலையை பேணுவதோடு மனிதர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும் என்பதால், விலங்கு நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான எதிர்காலத்துக்கான உலகளாவிய பொறுப்புணர்வை ஊக்குவிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

**விலங்குகளை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்?**

விலங்குகள் பூமியின் இயற்கைச் சூழலின் அத்தியாவசிய அங்கமாகும். அவை இல்லாமல் மனிதர்கள் மட்டுமல்லாது, மொத்த உலகின் வாழ்வியலும்

தொடர்ச்சி▼

# விலங்குகளும் பூமியின் பங்குதாரர்களே!

தொடர்ச்சி▲

பாதிக்கப்படும். விலங்குகள் தாவரங்கள், மனிதர்கள் மற்றும் இயற்கை வளங்களோடு இணைந்து சூழலியல் சமநிலையைப் பேணுகின்றன. குறிப்பாக உணவுச் சங்கிலியில் ஒவ்வொரு விலங்கும் தனித்தனி பங்காற்றுவதால், அவற்றின் அழிவு முழு சுற்றுச்சூழலையும் சிதைக்கக் கூடியது.

பல்வேறு உயிரினங்கள் (biodiversity) பூமியின் ஆரோக்கியத்துக்கு மிக முக்கியமானவை. மருத்துவத் துறையில் கண்டுபிடிக்கப்பட்ட பல மருந்துகள் விலங்குகள் மற்றும் அவற்றின் இயற்கைத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டவை. அதேசமயம், விலங்குகள் மனிதனுக்கு உணர்ச்சி, நெருக்கம், மற்றும் கருணையை வளர்க்கும் திறனும் உடையவை. அவற்றுக்கு வாழ்வதற்கான உரிமை உண்டு என்பதை மறக்கக்கூடாது.

விலங்குகளை காப்பது நமது பொறுப்பே அல்லாது, எதிர்கால சந்ததிகளுக்காக ஒரு கடமையாகவும் உள்ளது. மனிதர்கள் தங்கள் பேராசையால் விலங்குகளின் வாழிடங்களை அழித்து வருகின்றனர். இதனால் தான் பல உயிரினங்கள் அழிந்து வருவதோடு அரிய வகையாகவும் இருந்து வருகின்றன.

யானை, புலி, சிங்கம் உள்ளிட்ட உயிரினங்களும் ஆண்டுதோறும் அதிக அளவில் இறந்து வருகின்றன. இலங்கையில் கடந்த 2024 ஆம் ஆண்டு 388 யானைகள் இறந்ததாக Department of Wildlife Conservation (DWC) உடைய அறிக்கைகள் கூறுகின்றன. தன்சானியாவில் 2009 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து ஒன்பதாயிரமாக இருந்த யானைகளின் எண்ணிக்கை 43 ஆயிரமாக சரிந்துள்ளது. இதில் தந்தங்களுக்காக அதிக அளவில் யானைகள் கொல்லப்படுகின்றன. தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் நடத்திய புலிகள் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளன. தமிழகத்தை பொறுத்தவரை 264 புலிகள் உள்ளதாகவும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் மட்டும் 40 ஆயிரம் புலிகள் வாழ்ந்ததாக கூறப்படுகிறது ஆனால் வேட்டை முதலிய பல காரணங்களால் தொடர்ந்து உலகெங்கும் புலிகளின் எண்ணிக்கை குறைய தொடங்கியது.

இலங்கையில் Hog deer என்ற மான் வகை அழிவடையும் அபாயத்தில் உள்ளது. இவைப் பெரும்பாலும் இலங்கையில் தெற்கு கடற்கரை பகுதியில் சிறிய பிரிவுகளில் மட்டுமே வாழ்கின்றன. வாழ்விடத்தின் குறைவும், மனித அழுத்தங்களும் இவ்வகை மான்கள் உயிர் வாழ்வதற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றன.

உலக விலங்குகள் தினம் நமக்கு விலங்குகள் மற்றும் இயற்கை உலகின் அவசியத்தையும், அவற்றை பாதுகாப்பதன் மூலம் மனிதனின் வாழ்வும் பாதுகாக்கப்படுவதை நினைவூட்டுகிறது.

விலங்குகள் என்பது வெறும் காட்டில் வாழும் உயிரினங்கள் அல்ல. அவை பூமியின் சுற்றுச்சூழல் சமநிலையின் அத்தியாவசிய அங்கமாகின்றன. விலங்குகளின் அழிவைத் தடுக்க இன்றே நாம் முன்னெடுக்கும் சிறிய நடவடிக்கைகள், நாளைய சந்ததிகளுக்கான உயிர் வளமான சூழலையும், ஆரோக்கியமான பூமியையும் உருவாக்கும். ஆகவே, விலங்குகளைக் காப்பது மனிதன் கடமையேயன்றி, எதிர்காலத்துக்கான நம்முடைய பெரிய பொறுப்பும் ஆகும்.

யே.வினிதா,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

---

## கொழும்பில் சிக்கிய விபச்சார விடுதி

# 9 தாய்லாந்து பெண்கள் உட்பட பத்து பேர் கைது!



கொழும்பு 7 – கறுவாத்தோட்டம் பிரதேசத்தில் நீண்ட காலமாக மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதியில் இருந்து ஒன்பது தாய்லாந்து பெண்கள் உட்பட 10 பேர் கொழும்பு தெற்கு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு தெற்கு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில், பொலிஸ் அதிகாரி ஒருவர் இந்தியப் பிரஜை போன்று மசாஜ் நிலையத்துக்குள் சென்று தகவல்களைத் திரட்டி பின்னர் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மசாஜ் நிலையத்தின் உரிமையாளரும் அடங்குகின்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வர்த்தகர்கள் பலர், இந்த விபச்சார விடுதிக்கு வருகை தருவதாக மசாஜ் நிலையத்தின் உரிமையாளர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு தெற்கு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2026 தேர்தலில் பிராமணர்களுக்கு 5 இடங்களில் போட்டியிட வாய்ப்பு

## நாம் தமிழர் கட்சி முக்கிய முடிவு



தமிழகத்தில் நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண் வேட்பாளர்களை களமிறக்கவும், பிராமணர்களுக்கு 5 இடங்களில் வாய்ப்பளிக்கவும் நாம் தமிழர் கட்சி முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி கொண்டிருக்கிறது.

இதையொட்டி ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான வியூகம் அமைத்தல், கூட்டணி பேச்சுவார்த்தை, தங்களது கட்சிகளின் வேட்பாளர்களை தேர்வு செய்தல், பூத் கொமிட்டிகளை வலுப்படுத்துதல் போன்ற தேர்தல் பணிகளில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன.

அதற்கேற்ப கட்சிகளின் தலைமை, மாவட்ட அளவில் கலந்தாய்வு கூட்டங்கள், பரப்புரை கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றை நடத்தி பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் 2026 தேர்தலில் நாம் தமிழர் கட்சியும் தேர்தலுக்கான களப் பணிகளில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது.

அதன்படி தேர்தலுக்கு ஓராண்டு காலத்துக்கு முன்பாகவே தனித்துத் தான் போட்டி என்று அறிவித்து, கட்சி உட்கட்டமைப்பு பணிகளில் நாம் தமிழர் கட்சி கவனம் செலுத்தி வருகிறது. இந்நிலையில் 2026 சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண் வேட்பாளர்களை நிறுத்தவும், பிராமணர்களுக்கு 5 இடங்களில் வாய்ப்பளிக்கவும் நாம் தமிழர் கட்சி திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் இரா.ஐயனார் கூறுகையில்,

“நாம் தமிழர் கட்சி 2026 தேர்தலுக்கான பணிகளில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இதுவரை தேர்தலையொட்டி 150 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நாம் தமிழர் கட்சியை பொறுத்தவரை தொகுதி பங்கீடு என்பது ஆண், பெண் இருபாலருக்கும் சரிசமமாக வழங்கப்படும். அந்தவகையில் 2026 தேர்தலில் 234 தொகுதிகளில் தலா 117 பெண்கள், 117 ஆண்கள் நிறுத்தப்பட உள்ளனர்.

குறிப்பாக இந்தமுறை அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண்களுக்கே வாய்ப்பளிக்கப்பட உள்ளது. அதேபோல் இதுவரை எந்த ஒரு அரசியல் கட்சியும் முன்னெடுக்காத வகையில் முதல் முறையாக 5 இடங்களில் பிராமணர்களுக்கு வாய்ப்பளிக்க உள்ளோம். இதற்கு முன்பு தமிழக அரசியல் வரலாற்றில் கும்பகோணம் அல்லது மயிலாப்பூர் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டுமே பிராமணர்களுக்கு இதர கட்சிகளில் வாய்ப்பளிக்கப்படும்.

ஆனால் 2026 தேர்தலில் முதல் முறையாக பிராமணர்களுக்கு அதிகப்படியான இடங்களை நாம் தமிழர் கட்சி ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்த 5 பேரில் நான்கு பேர் பெண்களாவர்.

இந்த வேட்பாளர்கள் சென்னையில் மயிலாப்பூர், ஆலந்தூர், தி.நகர், சைதாப்பேட்டை ஆகிய 4 சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிட உள்ளனர். இவர்கள் உட்பட சென்னையில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் வேட்பாளர் தேர்வு நிறைவடைந் துள்ளதும் குறிப்பிடத்தக்கது” என்று தெரிவித்தார்.

# ஆளுநர் மாளிகை, முதல்வரின் வீட்டுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல்





ஆளுநர் மாளிகை, முதல்வர் ஸ்டாலின் வீடு, விமான நிலையம் உட்பட சென்னையில் பல்வேறு இடங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் பரபரப்பான சூழல் காணப்பட்டது.

சென்னையில் கடந்த ஓராண்டாகவே மின்னஞ்சல் மூலம் பள்ளி, கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், முதல்வர், அமைச்சர்களின் வீடு, ஆளுநர் மாளிகை என பல்வேறு இடங்களுக்கு தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. இதில் தொடர்புடைய குற்றவாளிகளை பொலிஸார் தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு 11.30 மணிக்கு டி.ஜி.பி. அலுவலகத்துக்கு வந்த மின்னஞ்சலில், தமிழக பா.ஜ.க. தலைமை அலுவலகமான கமலாலயத்தில் வெடிகுண்டு வைத்துள்ளதாகவும், சற்று நேரத்தில் அது வெடித்து சிதறும் என்றும் கூறப்பட்டிருந்தது.

நேற்று அதிகாலை 4.10 மணிக்கு டி.ஜி.பி. அலுவலகத்துக்கு வந்த மற்றொரு மின்னஞ்சலில் முதல்வர் ஸ்டாலின் வீட்டில் குண்டு வைத்துள்ளதாக கூறப்பட்டிருந்தது. கிண்டி ஆளுநர் மாளிகை, நடிகை த்ரிஷா வீடு, நடிகர் எஸ்.வி.சேகர் வீடு, சென்னை விமான நிலையம் ஆகிய இடங்களுக்கும் அடுத்தடுத்து மிரட்டல்கள் விடுக்கப்பட்டன.

பொலிஸார் உடனடியாக இது குறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து,வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்கள் மற்றும் மோப்பநாய்களுடன் பொலிஸார் விரைந்து சென்று அனைத்து இடங்களிலும் சோதனை நடத்தினர். கிண்டி ஆளுநர் மாளிகை, ஆழ்வார்பேட்டையில் உள்ள முதல்வர் ஸ்டாலின் வீடு, அதே பகுதியில் உள்ள நடிகை த்ரிஷா வீடு, மந்தைவெளியில் உள்ள நடிகர் எஸ்.வி.சேகர் வீடு, தியாகராய நகரில் உள்ள கமலாலயம், சென்னை விமானநிலையம் என மிரட்டல் விடுக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டது.

ஆனால், சந்தேகப்படும் வகையில் எந்த பொருளும் கிடைக்கவில்லை. இதையடுத்து, குண்டு மிரட்டல் வெறும் புரளி என்பது உறுதி செய்யப்பட்டது. மிரட்டல் மின்னஞ்சலை அனுப்பியது யார் என்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# த.வெ.க. தலைவர் விஜய் மீது வழக்கு பதிவு செய்யாதது ஏன்?



## உயர் நீதிமன்றம் கேள்வி



கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு விவகாரத்தில் த.வெ.க. தலைவர் விஜய் மீது வழக்கு பதிவு செய்யாதது ஏன் என்று அரசுத் தரப்புக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. உயிரிழப்பு நேரிட்ட நிலையில், கட்சித் தொண்டர்களை பொறுப்பற்ற முறையில் கைவிட்டுவிட்டு விஜய் உள்ளிட்ட நிர்வாகிகள் ஓடியுள்ளனர் என நீதிபதி கடும் கண்டனம் தெரிவித்தார்.

கரூரில் கடந்த 27 ஆம் திகதி த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற பிரசாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். இதை தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் 'ரோடு ஷோ' நிகழ்வுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வில்லிவாக்கத்தை சேர்ந்த பி.ஹெச். தினேஷ் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார்.

நீதிபதி என்.செந்தில்குமார் முன்பு இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி செந்தில் குமார் தெரிவிக்கையில்,

“கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இதுதொடர்பான காணொலிகள் வேதனை அளிக்கின்றன. இந்த வழக்கில் 2 பேர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அனைத்தையும் தமிழக அரசு அனுமதித்திருப்பது அதிருப்தி அளிக்கிறது.

விஜய் பயணம் செய்த பஸ் மோதி விபத்து ஏற்பட்டதாக காணொலி கள் வெளியாகியுள்ளன. அந்த விபத்து தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டதா? வழக்கு பதிவு செய்வதற்கு என்ன தடை? நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு கருணை காட்டுகிறீர்களோ? பஸ் மோதியது தொடர்பாக வழக்கு பதிவு செய்யாவிட்டால் பொலிஸ் மீது மக்களுக்கு எப்படி நம்பிக்கை இருக்கும். வழக்கு பதிவு செய்து, விஜய்யின் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்திருக்க வேண்டாமா. இந்த விஷயத்தில் நீதிமன்றம் கண்மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது.

கரூரில் நடந்துள்ள சம்பவம் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு. நீதிமன்றம் இதை கண்மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது. பொறுப்பை யாரும் தட்டிக்கழிக்க முடியாது. பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு, பெண்கள், குழந்தைகள் உட்பட ஏராளமானோர் உயிரிழந்த நிலையில், கட்சித் தொண்டர்களையும், ரசிகர்களையும் பொறுப்பற்ற முறையில் கைவிட்டுவிட்டு த.வெ.க. தலைவர் விஜய் உள்ளிட்ட நிர்வாகிகள் ஓடியுள்ளனர். அவர்களுக்கு தலைமைப் பண்பு இல்லை. சம்பவத்துக்கு பொறுப்பேற்காதது கண்டனத்துக்குரியது.” என்று தெரிவித்தார்.



# காசா மீதான தாக்குதலை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிட்டார் ட்ரம்ப்






அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காசா மீதான குண்டுவீச்சு தாக்குதல் நடத்துவதை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ட்ரம்பின் முன்மொழிவுக்கு பதிலளிக்கும் விதமாக, அனைத்து இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் விடுவித்து, மத்தியஸ்தர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்த ஹமாஸ் ஒப்புக்கொண்டுள்ளது.

பணயக்கைதிகளை விடுவித்து அதிகாரத்தை ஒப்படைக்க ஹமாஸ் தயாராக இருப்பதாகக் கூறியதைத் தொடர்ந்து, ட்ரம்ப் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஏறத்தாழ இரண்டு வருட போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தனது இறுதி எச்சரிக்கையை ஹமாஸ் ஓரளவு ஏற்றுக்கொண்டதை டொனால்ட் ட்ரம்ப் வரவேற்றுள்ளார்.

இருப்பினும், இது தொடர்பில் கருத்து வேறுபாடுகள் இன்னும் இருப்பதால் பேச்சு வார்த்தைகள் தேவைப்படும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இறுதி ஒப்பந்தத்திற்கு ஹமாஸ் ஏற்காவிட்டால் இதுவரை யாரும் பார்த்திடாத மோசமான விளைவுகள் ஏற்படும் என ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடுமையாக எச்சரிக்கை விடுத்திருந்தார்.

# ஜப்பானின் முதல் பெண் பிரதமராக சனே டகாயிச்சி தெரிவுசெய்யப்பட்டார்



கடும் போட்டிக்கு மத்தியில் ஜப்பானின் முதல் பெண் பிரதமராகும் வாய்ப்பை சனே டகாயிச்சி பெற்றுக்கொண்டார்.

உலகின் நான்காவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டின் தலைமையை ஆசிய – பசிபிக் பிராந்தியத்தில் அசாதாரண அரசியல் ஸ்திரமின்மை, விலைவாசி உயர்வு மற்றும் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் இவர் பொறுப்பேற்கவுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

செய்தி வாசிப்பாளராக இருந்து அரசியல்வாதியாக மாறி, அரசாங்கத்தின் உயர் பதவிகளில் பணியாற்றிய சனே டகாயிச்சி, தன்னுடன் போட்டியிட்ட நான்கு வேட்பாளர்களையும் தோற்கடித்து ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைமைப் பதவியை வென்றார்.

இது கட்சித் தலைமைப் பதவியில் அவர் வகிக்கும் மூன்றாவது வெற்றியாகும்.

இந்த மாத இறுதியில் அவர் பிரதமராகப் பொறுப்பேற்கத் தயாராக உள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜப்பானின் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றத் தேர்தல்களில் தொடர் பின்னடைவுகளைச் சந்தித்ததைத் தொடர்ந்து, ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்திலேயே பிரதமர் ஷிகேரு இஷிபா தனது பதவியை இராஜினாமா செய்தார்.

முன்னாள் பிரிட்டிஷ் தலைவர் மார்கரெட் தட்சரை தனது முன்மாதிரிகளில் ஒருவராக பட்டியலிடும் 64 வயதான சனே டகாயிச்சி, ஜப்பானின் மிக நீண்ட காலம் பணியாற்றிய தலைவரான படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் நெருங்கிய கூட்டாளியாகவும் இருந்தார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஒன்றுகூடலில் சனே டகாயிச்சி ஜப்பானின் புதிய பெண் பிரதமராக பதவியேற்பார் என தெரிவிக்கப்படுகிறது.

பக்கங்கள் - 02

கனடா முரசு

சனிக்கிழமை 04/10/2025

## கனடா விமானியொருவர் 89 வயதில் உலக சாதனை



C2▶



# ட்ரம்பை அடுத்த வாரம் சந்திக்கிறார் மார்க் கார்னி

கனடா பிரதமர் மார்க் கார்னி அடுத்த வாரம் தொடக்கத்தில் அமெரிக்கா தலை நகர் வொஷிங்டனுக்கு பயணம் செய்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திக்கவுள்ளார்.

பிரதமரானதிலிருந்து இதுவே அவரது இரண்டாவது அமெரிக்க விஜயம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பு, அமெரிக்கா விதித்த கடும் சுங்க வரிகள் தொடர்பான C2▶

# பற்றி எரிந்த காரில் இருந்தவரை உயிருடன் மீட்டனர் பொலிஸார்




கனடாவில் பற்றி எரிந்த காரில் சிக்கியிருந்தவரை பொலிஸார் தைரியமாக மீட்டுள்ளனர்.

மொன்றியாலின் வடகிழக்கே உள்ள லாஎசோம்சன் பகுதியில் எரியும் காரில் சிக்கிய ஒருவரே இவ்வாறு உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இந்த துணிச்சலான செயலை செய்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

கேப்ரியல் டாவ் மற்றும் நோமி வெஸினா ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த வாகனத்தை கண்டு அருகில் சென்றுள்ளனர்.

இதன் போது கார் முழுவதும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த நிலையில், உள்ளே சிக்கியிருந்த ஒருவர் "நான் சாகப்போகிறேன், கார் முழுவதும் தீ பிடித்துவிட்டது" என்று C2▶

# கனடாவில் மக்களின் உடல் எடை அதிகரிப்பு

கனடாவில் பெரும்பாலான வயது வந்தவர்கள் தற்போது அதிக எடை அல்லது உடல் பருமன் நிலையில் உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் அண்மையில் வெளியிட்ட தகவல்களின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2022 முதல் 2024 வரையிலான காலத்தில், 18 முதல் 79 வயதுக்குட்பட்ட கனடியர்களில் 68 வீதமானவர்கள் அதிக எடை உடையவர்கள் என அறிக்கை தெரிவிக்கிறது.

இது, கொவிட் பெருந்தொற்றுநோய்க்கு முன்பாக இருந்த 60 வீதத்திலிருந்து குறிப்பிடத்தக்க உயர்வாகும்.

கொவிட் தொற்றுநோய்க்குப் பிறகு வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள், உடல் இயக்கம் குறைதல் மற்றும் அமர்ந்திருக்கும் பழக்கங்கள் அதிகரித்தல், ஆகியவை உடல் எடை அதிகரிக்க காரணமாக இருக்கலாம் என புள்ளி விபரத் தகவல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அதிகமானோருக்கு வயிற்றுப் பகுதியில் கொழுப்பு அதிகரிப்பு பரவலாக உள்ளது என்றும் ஆய்வு கண்டறிந்துள்ளது.

49 வீதமான கனடியர்களின் இடுப்பு அளவு, சுகாதார ஆபத்துகளுடன் தொடர்புடைய அளவை மீறியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.



# கனடா விமானியொருவர் 89 வயதில் உலக சாதனை

விமானியொருவர் தனது 89 ஆவது வயதில் புதிய உலக சாதனையொன்றை படைத்துள்ளார்.

போலியோ ஒழிப்பு நிதி திரட்டும் நோக்கில் விமானப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது, 89 வயதான விமானி எட் கால்கின் புதிய உலக சாதனை படைத்துள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரே எஞ்சின் கொண்ட சிறிய விமானத்தில் அட்லாண்டிக் கடலைக் கடந்து பறந்த மூத்த விமானி என்ற சாதனையை அவர் படைத்ததாக கருதப்படுகிறது.

கால்கின் மற்றும் அவரது துணை விமானி பீட்டர் டீஹன், புதன்கிழமை போர்ச்சுகலின் அசோரஸ் பகுதியில் இருந்து கனடாவின் நியூஃபவுண்ட்லாந்தின் செயின்ட் ஜான்ஸ் வரை பறந்து சென்றுள்ளனர்.




“எனக்கு பறப்பதில் பெரும் ஆர்வம் உள்ளது. வானத்தில் இருப்பது அற்புதம். பெரிய கடல் ஒன்றைத் தாண்டும் போது, நம்மிடம் இருக்கிறது என்று நினைக்கும் பிரச்சினைகள் சிறியதாகவே தோன்றுகின்றன,” என்று கால்கின் கூறியுள்ளார்.

இச்சாதனையை கின்னஸ் உலகச் சாதனை நிறுவனம் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்த இன்னும் சில வாரங்கள் ஆகும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 37 நாள்கள் நீண்ட விமானப் பயணம், சர்வதேச ரொட்டரி அமைப்பின் போலியோ தடுப்பூசி திட்டத்திற்காக பத்தாயிரக்கணக்கான டொலர்கள் திரட்டியுள்ளது.

### பற்றி எரிந்த...

(C1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்திக் கொண்டிருந்தார் என பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இருவரும் உடனடியாக பின்புற கண்ணாடியை உடைத்து, அந்த நபரை பின்புறம் நகர்த்தி வெளியே தூக்கி வந்தனர்.

அவர் மயக்கமடைந்த நிலையில் இருந்ததால், தீ வேகமாக பரவிக் கொண்டிருந்த போதும் அவரை பாதுகாப்பாக வீதியோரம் தூக்கிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு அந்த நபரை மீட்டு சில நிமிடங்களில் கார் முழுவதுமாக வெடித்து எரிந்து சாம்பலானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அந்த நபர் தற்போது சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### ட்ரம்பை...

(C1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகள் நடைபெறும் நிலையில், மேலும் கனடா – அமெரிக்கா – மெக்சிகோ ஒப்பந்தம் மறுபரிசீலனை தொடங்கப்பட்டிருக்கும் சூழலில் நடைபெறுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் கனடா உள்ளிட்ட பல நாடுகளுக்கு எதிராக வர்த்தகப் போரைத் தொடங்கிய அமெரிக்க ஜனாதிபதி, மரம், எஃகு, அலுமினியம், வாகன உற்பத்தி, செம்பு போன்ற துறைகளில் கடும் சுங்க வரிகளை விதித்திருந்தார்.

கனடா மற்றும் அமெரிக்கா பல மாதங்களாக புதிய பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன.

சிறந்த ஒப்பந்தம் பெறுவது தான் எங்கள் முன்னுரிமை, விரைவான ஒப்பந்தம் அல்ல என்று கார்னி வலியுறுத்தி வருகிறார்.

கடந்த மாதம், கார்னி அரசு பல எதிர்-சுங்க வரிகளை நீக்குவதாக அறிவித்தது. அப்போது பத்திரிகையாளர்கள், இந்த நடவடிக்கை பேச்சுவார்த்தையை எளிதாக்குமா என்று கேட்டபோது, ட்ரம்ப் ‘ஆம்’ என்று உறுதிபடுத்தினார் என்று கார்னி தெரிவித்தார்.